[2018] 11 எஸ்.சி.ஆர். 677

திருமதி. ஷமீம்

-எதிர்-

மாநிலம் (டெல்லி ஜிஎன்சிடி)

(குற்றவியல் மேல்முறையீடு எண்.56/2018)

செப்டம்பர் 19, 2018

மாண்புமிகு நீதியரசர் திரு. ரஞ்சன் கோகாய்,

மாண்புமிகு நீதியரசர் திரு. நவீன் சின்ஹா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. கே.எம். ஜோசப்

தண்டனைச் சட்டம், 1860 - பிரிவுகள் 302/307/34 - மேல்முறையீட்டாளர் - குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரது மகள் (அ.சா-4) மற்றும் அ.சா-1 இடையே நடைபெற்ற திருமணத்தை கடுமையாக எதிர்த்துள்ளார் - அ.சா-1-ன் சகோதரனும், தாயாரும் அவர்களுடைய வீட்டின் முதல் தாளத்தில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் - மேல்முறையீட்டாளரின் விடுதலை உயர்நீதிமன்றத்தால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது - ஒழுங்கு நிலை - முடிவு : அ.சா-4 மேல்முறையீட்டாளரின் மகளாவார் - நிகழ்வு நடந்த உடனேயே, அ.சா-4 தனது பேச்சைக் கேட்கவில்லை என்பதால், அ.சா-1-ன் சகோதரர் மற்றும் தாயாரை அவர் கொலை செய்ததாகவும், அடுத்ததாக அ.சா-1 கொலை செய்யப்படுவார்

என்றும் மேல்முறையீட்டாளர் அவரிடம் கூறியதாக அ.சா-4 வாக்குமூலம் அளித்துள்ளார் - குற்றவியல் விசாரணையில், பொதுவாக இறந்து போனவரின் மனைவி, கணவர், மகன் அல்லது மகள் ஆகியோரின் சாட்சியங்களுக்கு, அவர்கள் உண்மையை பேசாதிருக்க எந்த காரணமும் இல்லை மற்றும் உண்மையான குற்றவாளியை காப்பதற்கும் எந்த காரணமும் இல்லை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அதிக முக்கியத்துவம் தரப்படும் - நெருக்கமான உறவுடைய குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக அத்தகைய சாட்சி சாட்சியம் அளிக்கும் போது, அதே கொள்கை பொருத்திப் பார்க்கப்படவில்லை என்பதற்கு எந்த காரணமும் இல்லை - சாதாரண மனிதனின் நடத்தைப்படி, நெருங்கிய உறவுடைய குற்றஞ்சாட்டப்பட்டவரை, ஒரு சாட்சி பாதுகாக்கவும் மற்றும் காப்பாற்றவும் முனைவார் - குற்றஞ்சாட்டப்பட்ட அவரது சொந்த தாயாருக்கு எதிராக வாக்குமூலம் அளிக்க பெரும் உறுதியும் மற்றும் மன வலிமையும் தேவைப்படும் - சாட்சிக்கும், மேல்முறையீட்டாளருக்குமிடையே உள்ள உறவின் தன்மையைக் கருதும்போது, சட்டத்திற்கு அப்பாற்பட்ட சுயமான ஒப்புதல் வாக்குமூலமான அ.சா-4-ன் வாக்குமூலம் உறுதிச் சான்றாக கருதப்படலாம் - அ.சா-3 (அ.சா-1-ன் சகோதரர்), இரத்தக்கறை படிந்த உடைகளுடன் மேல்முறையீட்டாளரையும் மற்றும் பிற குற்றஞ்சாட்டப்பட்டவர்களையும் பார்த்துள்ளார் - மேல்முறையீட்டாளரின் இரத்தக்கறை படிந்த துப்பட்டா (chunni), பூட்டு மற்றும் சாவி ஆகியவை மேல்முறையீட்டாளரின் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி கைப்பற்றப்பட்டுள்ளது - அ.சா-2 (அ.சா-1-ன் சகோதரி) கூட நிகழ்வின் நம்பகமான சாட்சி ஆவார் - மேல்முறையீட்டில் தகுதிப்பாடு ஏதுமில்லை -

இருப்பினும்,மேல்முறையீட்டாளருக்கு 25 ஆண்டுகள் சிறை காவலை முடிக்கும் வரை மன்னிப்பின் பலனை மறுக்கும் உயர்நீதிமன்றத்தின் உத்தரவு நிலைநிறுத்தத்தக்கதல்ல - எதிர்ப்புக்குள்ளான உத்தரவு அந்த அளவுக்கு மட்டுமே நீக்கறவு செய்யப்படுகிறது - தண்டனை.

சாட்சியம் - காயமுற்ற சாட்சி - ஏற்பது - விவாதம்.

குற்றவியல் விசாரணை - சாட்சி - சாட்சியத்தில் சிறு முரண்பாடுகள் - விளைவு - விவாதம்.

குற்றவியல் விசாரணை - நீதிபதியின் கடமை - விவாதம்.

குறிப்பிட்ட அளவிற்கு மேல்முறையீட்டை அனுமதித்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது :

1.1. குற்றவியல் விசாரணையில், பொதுவாக இறந்துபோனவரின் மனைவி,கணவர், மகன் அல்லது மகள் ஆகியோரின் சாட்சியங்கள், அவர்கள் உண்மையைப் பேசாதிருக்க எந்த காரணமும் இல்லை மற்றும் உண்மையான குற்றவாளியை காப்பாற்றுவதற்கு எந்த காரணமும் இல்லை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அதிக முக்கியத்துவம் தரப்படும். நெருக்கமான உறவுடைய குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக அத்தகைய சாட்சி, சாட்சியமளிக்கும் கோட்பாட்டை ஏன் பயன்படுத்த முடியாது. சாதாரண மனிதனின் குணம் மற்றும் நடத்தையின்படி, நெருங்கிய உறவுடைய குற்றஞ்சாட்டப்பட்டவரை, ஒரு சாட்சி, பாதுகாக்கவும் மற்றும் காப்பாற்றவும் முனைவார். குற்றஞ்சாட்டப்பட்ட அவரது சொந்த தாய்க்கு எதிராக

வாக்குமூலம் அளிக்க பெரும் உறுதியும், மனவலிமையும் தேவைப்படும். அத்தகைய சாட்சியின் நம்பகத்தன்மைக்கு அதே அளவு முக்கியத்துவம் தரப்படவில்லை என்பதற்கு எந்த காரணமும் இல்லை. அ.சா-4 மேல்முறையீட்டாளரின் மகளாவார். நிகழ்வு நடந்த இரு நாட்களுக்கு முன்பு, அ.சா-1-ஐ விட்டுச் செல்லுமாறும், தவறினால் அவரது குடும்ப உறுப்பினர்களை கொலை செய்துவிடுவதாகவும் மேல்முறையீட்டாளர் அச்சுறுத்தியதாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார். நிகழ்வு நடந்த உடனேயே, அவரது மாமியார் வீட்டை அடைந்து, வராந்தாவிற்கு வந்தார். தனது வராந்தாவில் நின்று கொண்டிருந்த மேல்முறையீட்டாளர், சாட்சி தனது பேச்சைக் கேட்காததால், இறந்தவரைக் கொன்றதாகவும், அடுத்து அவளது கணவர் கொலை செய்யப்படுவார் என்றும் சாட்சியிடம் கூறியுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அவர் அதனையே வலியுறுத்தியுள்ளார். சாட்சிக்கும், மேல்முறையீட்டாளருக்குமிடையே உள்ள உறவின் தன்மையைக் கருதும்போது, சட்டத்திற்கு அப்பாற்பட்ட சுயமான ஒப்புதல் வாக்குமூலம் என்பதால், அது ஒரு உறுதிப்படுத்தும் ஆதாரமாக கருதப்படலாம். இரவு சுமார் 10.30 மணியளவில் வீடு திரும்பியபோது, மேல்முறையீட்டாளரும், மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் இரத்தக்கறை படிந்த உடைகளுடன் தனது வீட்டிலிருந்து வெளியே வந்ததாகவும், அவர்கள் மேல்முறையீட்டாளர் வீட்டை நோக்கிச் சென்றதாகவும் அ.சா-3 (அ.சா-1-ன் சகோதரர்) வாக்குமூலம் அளித்துள்ளார். சிறிது நேரத்திற்குப் பிறகு, மேல்முறையீட்டாளர் வீட்டிலிருந்து பிற குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வெளியே வந்து சந்தை நோக்கி சென்றுள்ளனர். சாட்சி தனது குறுக்கு விசாரணையிலும் இதையே வலியுறுத்தியுள்ளார்.

மேல்முறையீட்டாளரின் ஒப்புதல் வாக்குமூலத்தின்பேரில், இரத்தக்கறை படிந்த பூட்டு மற்றும் சாவியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

12. அ.சா-2 (அ.சா-1-ன் சகோதரி) காயமுற்ற சாட்சியாவர், நிகழ்வின் போது, தொண்டை அறுபட்டு குரல் இழப்பு ஏற்பட்டதால், இரண்டு மாதங்கள் வரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதே நிகழ்வில் பாதிப்படைந்ததால், அந்த சாட்சி உண்மையே பேசுவார் என கருதப்படும் காயமுற்ற சாட்சியின் சாட்சியம் பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. இறந்துபோன நபர்கள் பிற குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட பிறகு, மேல்முறையீட்டாளர் மேல்தளத்திற்கு வந்ததாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் தூண்டுதலால் அ.சா-4-ன் சகோதரரான, குற்றஞ்சாட்டப்பட்ட நவுஷத், மீண்டும் சாட்சியின் தொண்டையில் சவரக் கத்தியால் தாக்கியுள்ளார். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வெளியேறும்போது, மேல்முறையீட்டாளர் சாட்சி மீது தடுமாறி விழுந்துள்ளார். மேல்முறையீட்டாளரின் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி, மறுநாள் கண்டுபிடிக்கப்பட்ட துப்பட்டா (chunni) இரத்தக்கறை படிந்த துப்பட்டா என விளக்கப்பட்டுள்ளது. சாட்சிகளின் சாட்சியத்தை மதிப்பிடுகையில், சாட்சியின் சாட்சியம் முழுவதுமாக நம்பிக்கையூட்டும் விதமாக இருக்கிறதா என்பதே அணுகுமுறையாக இருத்தல் வேண்டும். அந்த எண்ணம் உருவாகிவிட்டால், சாட்சியம் முழுவதிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள், குறைகள், தகுதியின்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, சாட்சியங்களை ஆராய்ந்து, அது பொதுவான சாட்சியத்திற்கு எதிரானதா மற்றும் சாட்சியத்தின் முந்தைய மதிப்பீடு

நம்பத்தகுதியற்றதாகிவிட்டதா என்பதை கண்டறிய நீதிமன்றம் அவற்றை மதிப்பீடு செய்யவேண்டியது அவசியம் என்பதில் ஐயமில்லை. வழக்கின் அடிப்படையைத் தொடாத அற்பமான விஷயங்களில் உள்ள சிறிதளவு முரண்பாடுகளை சாட்சியத்திலிருந்து இங்கோ அல்லது அங்கோ உள்ள சூழ்நிலையில் அவ்வார்த்தைகளை எடுத்து அளவுக்கு மீறிய தொழிநுட்ப அணுகுமுறையால், விஷயத்தின் அடிப்படையைப் பாராமல், சில தொழில்நுட்ப பிழைகளுக்கு முக்கியத்துவம் தருவதென்பது, சாட்சியத்தை முழுவதுமாக நிராகரிக்க அனுமதிக்காது. காவல்துறை அறிக்கையில் ஏற்படும் சிறிய விடுபடல்கள் ஒருபோதும் கடும் பிழையாக கருதப்படுவதில்லை. காவல்துறை முன்பாக சாட்சியங்களால் தரப்படும் வாக்குமூலங்கள், சுருக்கமான விபரங்களாகக் கருதப்படும் மற்றும் நீதிமன்றத்தால் சாட்சியமாக எடுக்கப்படாது. சிறிய/அற்பமான விடுபடல், சம்பந்தப்பட்ட சாட்சிகள் பொய்யர்கள் என்று நீதிமன்றம் காண நியாயமில்லை. இங்கு ஒழுங்கமைதியற்ற மற்றும் அங்குள்ள முரண்பாடுகள் ஆகியவற்றால் அரசுத்தரப்பு சாட்சியம் பாதிக்கப்படலாம், ஆனால் அது கடமையில் குறைந்தாலும் அதிலிருந்து எந்த ஒரு குற்ற வழக்கும் விடுபட முடியாது. அத்தகைய முரண்பாடுகள், விஷயத்தின் அடித்தளத்திற்கு செல்கிறதா அல்லது முக்கியமற்ற விஷயங்கள் சார்ந்தவையா என்பதைப் பார்க்கவேண்டும். முந்தைய வழக்கில், சாட்சியத்தில் பெறப்படும் முரண்பாடுகளை சாதகமாகக் கோரும், எதிர்வாதம் நியாயப்படுத்தப்படலாம். இருப்பினும், பிந்தையதில், அத்தகைய நன்மை எதுவும் கிடைக்காது.

1.3. ஒவ்வொரு குற்றவியல் விசாரணையும், உண்மையைத் தேடுவதற்கான தேடலாகும். குற்றவியல் விசாரணைக்குத் தலைமை தாங்கும் நீதிபதியின் கடமையானது, எந்த ஒரு நிரபாரதியும் தண்டிக்கப்படக்கூடாது என்பது மட்டுமல்லாமல், குற்றம் செய்த நபரை தப்பவிடாமல் பார்த்துக் கொள்வதும் ஆகும். ஒன்று மற்றொன்றைப்போல் முக்கியமானதுதான். இவை இரண்டும் நீதிபதியால் நிறைவேற்றப்படவேண்டிய பொதுக்கடமைகள் ஆகும். விசாரணை நீதிமன்றம் சாட்சியத்தை தவறாக மதிப்பிட்டு முடிவுக்கு வந்ததில் பிழை புரிந்துள்ளது. மேலும், இ.த.ச., பிரிவு 34-ன் உதவியுடன் மேல்முறையீட்டாளர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டவுடன், தண்டனை வழங்குவதில் வேறுபாடு காட்டி அவரை தனிமைப்படுத்துவதில் எவ்வித நியாயமுமில்லை எனத் தோன்றுகிறது. எவ்வாறாயினும், அதற்கான சிறப்பு காரணங்கள் எதையும் உயர்நீதிமன்றம் குறிப்பிடவில்லை. எனவே மேல்முறையீட்டாளருக்கு இருபத்தைந்து ஆண்டுகளாக மறுக்கப்பட்டுள்ள தண்டனை குறைப்பு உத்தரவை நிலைநிறுத்த இயலாது. மேலும், தீர்ப்பு அந்த அளவிற்கு மட்டுமே நீக்கறவு செய்யப்படுகிறது.

உ.பி. மாநிலம் -எதிர்- கிருஷ்ணா மாஸ்டர் மற்றும் பலர் (2010) 12 **எஸ்சிசி** 324 : [2010] 9 **எஸ்சிஆர்** 563 - **சார்வுறப்பட்டது.**

சந்திரப்பா மற்றும் பலர் -எதிர்- கர்நாடக மாநிலம் (2007) 4 **எஸ்சிசி** 415 : [2007] 2 **எஸ்சிஆர்** 630 – **குறிப்பிடப்பட்டுள்ளது.**

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[2007] 2 எஸ்சிஆர் 630	**குறிப்பிடப்பட்டுள்ளது**	**பத்தி 6**
[2010] 9 எஸ்சிஆர் 563	**சார்வுறப்பட்டது**	**பத்தி 14**

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண்.56/2018.

புது டெல்லியில் உள்ள டெல்லி உயர்நீதிமன்றத்தின் குற்றவியல் மேல்முறையீடு எண்.354/2015-இல் 10.08.2015 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு/12.08.2015 தேதியிடப்பட்ட தண்டனைக்கான உத்தரவிலிருந்து எழுகிறது.

அபய் குமார், சௌரப் மிஸ்ரா, வினீத் கே.ஆர்.சிங், ஹிமான்ஷு பால் சிங், செல்வி. ஷெ:பாலி வோஹ்ரா - மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான வழக்குரைஞர்கள்.

செல்வி. கீதா லூத்ரா, மூத்த வழக்குரைஞர், பி.கே.டே, டி.ஏ.கான், பாரத் சிங், உஜ்வால் ஜெயின், செல்வி ஷிவானி லூத்ரா லோகியா, கரண் நக்ரத், பி.வி.பலராம் தாஸ் - எதிர்மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான வழக்குரைஞர்கள்.

இந்நீதிமன்ற தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. நவீன் சின்ஹா அவர்களால் பகரப்பட்டது.

1. விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட அவரது உத்தரவை மாற்றி, மேல்முறையீட்டாளர், இ.த.ச., பிரிவு 302/307/34-ன்கீழ் உயர்நீதிமன்றத்தால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, ஆயுள் தண்டனை பிறப்பிக்கப்பட்டது. மேலும், மேல்முறையீட்டாளருக்கு

இருபத்தைந்து ஆண்டுகள் சிறை காவல் முடிக்கும்வரை தண்டனைக் குறைப்பிற்கான பலன் அவருக்கு மறுக்கப்பட்டுள்ளது.

2. விசாரணை நீதிமன்றம், குற்றஞ்சாட்டப்பட்ட ஏழு பேர்களில் 4 பேரை குற்றவாளிகள் என்றும், மேல்முறையீட்டாளர் மற்றும் இருவரை விடுவித்தும் தீர்ப்பளித்துள்ளது. உயர்நீதிமன்றம், குற்றத்தண்டனைக்கெதிரான மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்தும், மேல்முறையீட்டாளர் தவிர, பிற விடுவிப்பு உத்தரவில் தலையிட மறுத்தது.

3. 27.03.2006 அன்று இரவு, பப்பு மற்றும் அனிஷா (இதில் இதற்குப்பிறகு 'இறந்தவர்' என்று குறிப்பிடப்படும்), அவர்களின் வீட்டு முதல் தளத்தில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அ.சா-2, ஹீனா, சவரக்கத்தியால் அவரது கழுத்தில் பல காயங்களை அடைந்துள்ளார். இறந்தவர் மற்றும் அ.சா-2-ம், அ.சா-1 ஆன இஷ்ரத் அலியின் முறையே சகோதரர்/தாயார்/சகோதரி ஆவார். அ.சா-4 ஆன ஷப்னம், மேல்முறையீட்டாளரின் விருப்பத்திற்கெதிராக அ.சா-1-ஐ மணந்த, மேல்முறையீட்டாளரின் மகள் ஆவார். அ.சா-3 ஆன முஹம்மத் இம்ரான் அ.சா-1-ன் சகோதரர். 5 அடி முதல் அடி அகலமுள்ள சந்தால் பிரிக்கப்பட்ட பொதுவான நிலப்பரப்பில் தரப்பினர் ஒவ்வொருவரும் எதிரெதிர் வீடுகளில் வசித்து வந்துள்ளனர். அ.சா-1 மற்றும் அ.சா-4 அவர்கள் திருமணத்திற்குப் பின்னர் தனி வீட்டிற்கு மாறிவிட்டனர். அ.சா-3 வீடு திரும்பியபோது, மேல்முறையீட்டாளர் வீட்டிற்கு வெளியே நிற்பதையும், அதைத் தொடர்ந்து இரத்தக்கறை படிந்த துணிகளுடன் பிற குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வருவதையும் பார்த்துள்ளார். உள்ளே

நுழைந்த சாட்சி இறந்து போனவர்களின் உடல்களையும், பேச முடியாமல் காயமுற்றிருந்த அ.சா-2-யும் கவனித்துள்ளார் மற்றும் சம்பவ இடத்திற்கு வந்த அ.சா-1 மற்றும் அ.சா-4-கிடம் தெரிவித்துள்ளார். முன்னதாக, மாலையில், சாட்சியின் வீட்டை நோக்கி பார்த்துக்கொண்டு, அவரது வீட்டு வராந்தாவில் மேல்முறையீட்டாளர் நின்றிருந்ததை அ.சா-2 கவனித்துள்ளார். அ.சா-4 வராந்தாவிற்கு வெளியே வந்தபோது, சாட்சி அவளது பேச்சைக் கேட்காததன் விளைவாக இச்சம்வம் என்றும், அவர் இறந்தவரை, கொன்று விட்டதாகவும் மற்றும் அவரது கணவரும் அதே நிலையை சந்திக்க நேரிடும் என்றும் அவரிடம் கூறினார்.

4. விசாரணை நீதிமன்றம், பிரிவு 449/302/307/34-ன்கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு பேரையும் குற்றவாளிகள் என தீர்மானித்து அவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கியது. மேல்முறையீட்டாளர், அவரது இருப்பு தொடர்பான சந்தேகம், இரத்தக்கறை படிந்த அவரது துப்பட்டா (chunni)-ஐ மீட்டெடுக்க தவறியது மற்றும் சதித்திட்டம் குறித்து எந்த ஆதாரமும் இல்லாதது ஆகியவற்றைப் பொறுத்து சந்தேகத்தின் பலனைத் தந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

5. உயர்நீதிமன்றம் அவரது விடுதலைக்கு எதிரான மேல்முறையீட்டில், சாட்சியத்தை மறுமதிப்பீடு செய்த பின்னர், அ.சா-4 மற்றும் அ.சா-1-ற்கும் இடையேயான திருமணத்தில் மேல்முறையீட்டாளரின் அமைதியை குலைக்கக்கூடிய பலத்த எதிர்ப்பு இருந்ததற்கான அவரது உட்கருத்தை சுட்டிக்காட்டியது. மேல்முறையீட்டாளரால் தெரிவிக்கப்படத்தைத் தொடர்ந்து, இரத்தக்கறை படிந்த பூட்டு, சாவி மற்றும் இரத்தக்கறையுடன் கூடிய மேல்முறையீட்டாளரின் துப்பட்டா (chunni) மறுநாளே

கைப்பற்றப்பட்டதுடன், அ.சா-2-ஆன காயமுற்ற சாட்சியின் சாட்சியம் நம்பக்கூடிய ஒன்றாகவும், நம்பகத்தன்மையுடையதாகவும் கருதப்பட்டது. இந்தவகையில், இ.த.ச., பிரிவுகள் 302/307/34-ன்கீழ் மேல்முறையீட்டாளர் தண்டிக்கப்பட்டார்.

6. மேல்முறையீட்டாளர்கள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைக் குறிப்பிடும்போது, மேல்முறையீட்டாளரின் உடைகளில் இரத்தம் இருந்ததை எவரும் பார்த்ததாகக் கூறவில்லை என்று வாதிட்டார். தாக்குதலின்போது அவர் உடன் இருந்தார் என்பது உறுதியாக நிரூபிக்கப்படாததால், மேல்முறையீட்டாளர் பங்காக பொதுவான நோக்கம் இருந்தது என முடிவு செய்வதற்கான மூலக்கூறுகள் ஏதுமில்லை. சந்தின் குறுக்கே எதிரெதிரே வீடுகள் அமைந்திருந்ததால், சம்பவம் நடப்பதற்கு முன்னும் பின்னும் மேல்முறையீட்டாளர் தனது வராந்தாவில் இருந்தது இயல்பானது மற்றும் எந்தவொரு குற்றத்திற்கும் வழிவகுக்காது. மேல்முறையீட்டாளர் சம்பவம் நடந்த இடத்திலும், அவரது வீட்டிலும் ஒரே நேரத்தில் இருந்திருக்க முடியாது. இறந்தவரின் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தது பொதுவான நோக்கத்தை ஊகிக்க போதுமானதாக இருக்க முடியாது. அவரின் வாக்குமூலம் தாமதமாகப் பதிவு செய்யப்பட்டதாலும், தனது அசல் வாக்குமூலத்தில் முரண்பாடுகள் உட்பட சில கூடுதல் மற்றும் திருத்தங்கள் செய்துள்ளதால் அ.சா-2 நம்பகத்தன்மையற்றவர். அதே சாட்சியங்களின் அடிப்படையில், மேல்முறையீட்டாளரை விடுவிக்கக் கூடிய முடிவினை விசாரணை நீதிமன்றம் எடுத்துள்ளதால், உயர்நீதிமன்றம் அதே சாட்சியங்களை மறுபரிசீலனை செய்து மேல்முறையீட்டாளரை குற்றவாளி என்று தீர்ப்பளிக்க முடியாது.

சந்திரப்பா மற்றும் பலர் -எதிர்- கர்நாடக மாநில அரசு (2007) 4 எஸ்சிசி 415 என்ற வழக்கு சார்வுறப்பட்டது. அரிதினும் அரிதான வழக்குகளின் சோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் மற்றும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தண்டனை குறைப்பு மேல்முறையீட்டாளருக்கு மறுக்கப்பட்டிருக்க கூடாது.

7. அரசுத்தரப்பில் முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், உயர்நீதிமன்ற உத்தரவு நன்கு பரிசீலிக்கப்பட்ட ஒன்று மற்றும் சாட்சியங்களை மறுபரிசீலனை செய்ததன் அடிப்படையில் நியாயமானது என்றும் சமர்ப்பித்தார். அ.சா-4, மேல்முறையீட்டாளரின் மகள், அவரது சொந்தத் தாய்க்கு எதிராக வாக்குமூலம் அளித்துள்ளார். அ.சா-2 ஒரு காயமுற்ற சாட்சி ஆகும், அதன் நம்பகத்தன்மை அதிகமாக இருக்கவேண்டும். மேல்முறையீட்டாளரின் இருப்பு, அ.சா-2 மற்றும் அ.சா-3-ன் சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரின் கூற்று, இரத்தக்கறை படிந்த பூட்டு மற்றும் சாவியையும், இரத்தக்கறை படிந்த அவரது துப்பட்டாவையும் (chunni) கைப்பற்ற வழிவகுத்தது. மாறாக, விசாரணை நீதிமன்றத்தின் முடிவு முரணானதாகக் காணப்படுகிறது.

8. தரப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும், பதிவுருக்களில் உள்ள சாட்சியங்களையும் நாங்கள் பரிசீலித்தோம். மேற்படி சந்திரப்பா என்ற வழக்கில் விடுவிப்பிற்கான உத்தரவில் குறுக்கிடும்போது, மேல்முறையீட்டு நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவேண்டிய எச்சரிக்கைகளையும் மற்றும் வரம்புகளையும் உயர்நீதிமன்றம் விரிவாக விவாதித்துள்ளது. எனவே, மேற்கூறிய விவாதத்தை திரும்பவும் எங்களது உத்தரவில் சுமத்துவதற்கான எவ்வித காரணத்தையும் நாங்கள் காணவில்லை.

9. குற்றவியல் விசாரணையில், பொதுவாக இறந்துபோனவரின் மனைவி,கணவர், மகன் அல்லது மகள் ஆகியோரின் சாட்சியங்கள், அவர்கள் உண்மையைப் பேசாதிருக்க எந்த காரணமும் இல்லை மற்றும் உண்மையான குற்றவாளியை காப்பாற்றுவதற்கு எந்த காரணமும் இல்லை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அதிக முக்கியத்துவம் தரப்படும். நெருக்கமான உறவுடைய குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக அத்தகைய சாட்சி, சாட்சியமளிக்கும் கோட்பாட்டை ஏன் பயன்படுத்த முடியாது என்பதற்கான காரணத்தை நாங்கள் காணவில்லை. சாதாரண மனிதனின் குணம் மற்றும் நடத்தையின்படி, நெருங்கிய உறவுடைய குற்றஞ்சாட்டப்பட்டவரை, ஒரு சாட்சி, பாதுகாக்கவும் மற்றும் காப்பாற்றவும் முனைவார். குற்றஞ்சாட்டப்பட்ட அவரது சொந்த தாய்க்கு எதிராக வாக்குமூலம் அளிக்க பெரும் உறுதியும், மனவலிமையும் தேவைப்படும். அத்தகைய சாட்சியின் நம்பகத்தன்மைக்கு அதே அளவு முக்கியத்துவம் தரப்படவில்லை என்பதற்கு எந்த காரணமும் இல்லை. அ.சா-4 மேல்முறையீட்டாளரின் மகளாவார். நிகழ்வு நடந்த இரு நாட்களுக்கு முன்பு, அ.சா-1-ஐ விட்டுச் செல்லுமாறும், தவறினால் அவரது குடும்ப உறுப்பினர்களை கொலை செய்துவிடுவதாகவும் மேல்முறையீட்டாளர் அச்சுறுத்தியதாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார். நிகழ்வு நடந்த உடனேயே, அவரது மாமியார் வீட்டை அடைந்து, வராந்தாவிற்கு வந்தார். தனது வராந்தாவில் நின்று கொண்டிருந்த மேல்முறையீட்டாளர், சாட்சி தனது பேச்சைக் கேட்காததால், இறந்தவரைக் கொன்றதாகவும், அடுத்து அவளது கணவர் கொலை செய்யப்படுவார் என்றும் சாட்சியிடம் கூறியுள்ளார். குறுக்கு

விசாரணையிலும் அவர் அதனையே வலியுறுத்தியுள்ளார். சாட்சிக்கும், மேல்முறையீட்டாளருக்குமிடையே உள்ள உறவின் தன்மையைக் கருதும்போது, சட்டத்திற்கு அப்பாற்பட்ட சுயமான ஒப்புதல் வாக்குமூலம் என்பதால், அது ஒரு உறுதிப்படுத்தும் ஆதாரமாக கருதப்படலாம் என்பது எங்கள் கருத்தாகும்.

10. இரவு சுமார் 10.30 மணியளவில் வீடு திரும்பியபோது, மேல்முறையீட்டாளரும், மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் இரத்தக்கறை படிந்த உடைகளுடன் தனது வீட்டிலிருந்து வெளியே வந்ததாகவும், அவர்கள் மேல்முறையீட்டாளர் வீட்டை நோக்கிச் சென்றதாகவும் அ.சா-3 வாக்குமூலம் அளித்துள்ளார். சிறிது நேரத்திற்குப் பிறகு, மேல்முறையீட்டாளர் வீட்டிலிருந்து பிற குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வெளியே வந்து சந்தை நோக்கி சென்றுள்ளனர். சாட்சி தனது குறுக்கு விசாரணையிலும் இதையே வலியுறுத்தியுள்ளார், மேலும், சாட்சியின் வீட்டிலிருந்து மேல்முறையீட்டாளர் வெளியே வருவதை தான் பார்க்கவில்லை என்ற கருத்தை குறிப்பாக மறுத்துள்ளார். மேல்முறையீட்டாளரின் ஒப்புதல் வாக்குமூலத்தின்பேரில், இரத்தக்கறை படிந்த பூட்டு மற்றும் சாவியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

11. அ.சா-2 காயமுற்ற சாட்சியாவர், நிகழ்வின் போது, தொண்டை அறுபட்டு குரல் இழப்பு ஏற்பட்டதால், இரண்டு மாதங்கள் வரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதே நிகழ்வில் பாதிப்படைந்ததால், அந்த சாட்சி உண்மையே பேசுவார் என கருதப்படும் காயமுற்ற சாட்சியின் சாட்சியம் பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. இறந்துபோன நபர்கள் பிற குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட

பிறகு, மேல்முறையீட்டாளர் மேல்தளத்திற்கு வந்ததாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் தூண்டுதலால் அ.சா-4-ன் சகோதரரான, குற்றஞ்சாட்டப்பட்ட நவுஷத், மீண்டும் சாட்சியின் தொண்டையில் சவரக் கத்தியால் தாக்கியுள்ளார். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வெளியேறும்போது, மேல்முறையீட்டாளர் சாட்சி மீது தடுமாறி விழுந்துள்ளார். மேல்முறையீட்டாளரின் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி, மறுநாள் கண்டுபிடிக்கப்பட்ட துப்பட்டா (chunni) இரத்தக்கறை படிந்த துப்பட்டா என விளக்கப்பட்டுள்ளது.

12. சாட்சிகளின் சாட்சியத்தை மதிப்பிடுகையில், சாட்சியின் சாட்சியம் முழுவதுமாக நம்பிக்கையூட்டும் விதமாக இருக்கிறதா என்பதே அணுகுமுறையாக இருத்தல் வேண்டும். அந்த எண்ணம் உருவாகிவிட்டால், சாட்சியம் முழுவதிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள், குறைகள், தகுதியின்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, சாட்சியங்களை ஆராய்ந்து, அது பொதுவான சாட்சியத்திற்கு எதிரானதா மற்றும் சாட்சியத்தின் முந்தைய மதிப்பீடு நம்பத்தகுதியற்றதாகிவிட்டதா என்பதை கண்டறிய நீதிமன்றம் அவற்றை மதிப்பீடு செய்யவேண்டியது அவசியம் என்பதில் ஐயமில்லை. வழக்கின் அடிப்படையைத் தொடாத அற்பமான விஷயங்களில் உள்ள சிறிதளவு முரண்பாடுகளை சாட்சியத்திலிருந்து இங்கோ அல்லது அங்கோ உள்ள சூழ்நிலையில் அவ்வார்த்தைகளை எடுத்து அளவுக்கு மீறிய தொழிநுட்ப அணுகுமுறையால், விஷயத்தின் அடிப்படையைப் பாராமல், சில தொழில்நுட்ப பிழைகளுக்கு முக்கியத்துவம் தருவதென்பது, சாட்சியத்தை முழுவதுமாக நிராகரிக்க அனுமதிக்காது. காவல்துறை அறிக்கையில் ஏற்படும்

சிறிய விடுபடல்கள் ஒருபோதும் கடும் பிழையாக கருதப்படுவதில்லை. காவல்துறை முன்பாக சாட்சியங்களால் தரப்படும் வாக்குமூலங்கள், சுருக்கமான விபரங்களாகக் கருதப்படும் மற்றும் நீதிமன்றத்தால் சாட்சியமாக எடுக்கப்படாது. சிறிய/அற்பமான விடுபடல், சம்பந்தப்பட்ட சாட்சிகள் பொய்யர்கள் என்று நீதிமன்றம் காண நியாயமில்லை. இங்கு ஒழுங்கமைதியற்ற மற்றும் அங்குள்ள முரண்பாடுகள் ஆகியவற்றால் அரசுத்தரப்பு சாட்சியம் பாதிக்கப்படலாம், ஆனால் அது கடமையில் குறைந்தாலும் அதிலிருந்து எந்த ஒரு குற்ற வழக்கும் விடுபட முடியாது. அத்தகைய முரண்பாடுகள், விஷயத்தின் அடித்தளத்திற்கு செல்கிறதா அல்லது முக்கியமற்ற விஷயங்கள் சார்ந்தவையா என்பதைப் பார்க்கவேண்டும். முந்தைய வழக்கில், சாட்சியத்தில் பெறப்படும் முரண்பாடுகளை சாதகமாகக் கோரும், எதிர்வாதம் நியாயப்படுத்தப்படலாம். இருப்பினும், பிந்தையதில், அத்தகைய நன்மை எதுவும் கிடைக்காது.

13. மாணவராகிய அ.சா-2, சுமார் 13 வயதுடைய இளவர் சாட்சியவார். அவரது சாட்சியம் மற்றும் குறுக்கு விசாரணையின்போது, அந்த நிகழ்வை நினைவு கூர்ந்து உடைந்து போனார். அவரது குறுக்கு விசாரணை ஒன்றுக்கு மேற்பட்ட தேதிகளில் ஒத்திவைக்க வேண்டியதாயிற்று. எவ்வாறாயினும்கூட, அவரது குறுக்கு விசாரணை கடுமையான தன்மையதாக இருந்தாலும், அது சுமாராக 14 பக்கங்களாக இருந்தபோதிலும், அவர் அதை விடாப்பிடியாக எதிர்கொண்டார். நிகழ்வின்போது, நிகழ்விடத்தில் அவரது இருப்பு மற்றும் நிகழ்வின்போது ஏற்பட்ட காயம் ஆகியவை மறுக்கமுடியாத ஒன்றாகும். மேல்முறையீட்டாளரான பெண் மட்டுமே அங்கிருந்தார். அடையாளம் காணுவதில் உள்ள

குழப்பம் பற்றிய கேள்வி சாதாரணமாக எழவில்லை. குறுக்கு விசாரணையில் சாட்சி தனக்கு சொல்லிக்கொடுத்தார்கள் என்பதை திட்டவட்டமாக மறுத்துள்ளார் மற்றும் அவரது சாட்சியத்திலிருந்து அவரை நம்ப மறுக்க எங்களுக்கு எந்த காரணமும் காணப்படவில்லை. அவரது சாட்சியத்தில் சில முரண்பாடுகள் இருந்தாலும், அவை சிறு மற்றும் அற்பமான தன்மையுடையவை. ஆனால், அது நிகழ்விற்கான நம்பகமான சாட்சியாக அவரது நம்பகத்தன்மையை அழிக்கமுடியாது.

14. உ.பி. மாநிலம் -எதிர்- கிருஷ்ணா மாஸ்டர் மற்றும் பலர் (2010) 12 எஸ்சிசி 324 என்ற வழக்கில், உயர்நீதிமன்றம் குழந்தை சாட்சியின் நம்பகத்தன்மையைச் சந்தேகித்ததில் உடன்படாமல், கீழ்கண்டவாறு கருத்துரைத்தது :

> "36. .....எந்த கோட்பாட்டின் அடிப்படையிலும், வாழ்வின் எந்த அனுபவத்தின்பேரிலும், மதன்லாலின் குழந்தை நீண்ட காலத்திற்கு முன்பு பார்த்த விடயங்களை அதன் நினைவிற்கு மீண்டும் கொண்டு வரமுடியும் என்பது நினைத்துப் பார்க்க முடியாதது என்று உயர்நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட விதிவிலக்கற்ற கருத்துரையை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்ள தவறியுள்ளது. இளவயது குழந்தை, நீண்ட காலத்திற்கு முன் பார்த்தவற்றை முன்பு அவர் கண்ட, அவரது நினைவில் உள்ள உண்மைகளை பரிசீலனை செய்ய இயலாது என்பதை ஏற்கமுடியாது என்பது இந்த நீதிமன்றத்திற்கு தெரிந்த எந்த சட்டக்கோட்பாடு எதுவும் இல்லை. துப்பாக்கி சூடு மூலம் தனது குடும்ப உறுப்பினர்கள் 5 பேர்

எதிர்மேல்முறையீட்டாளர்களால் இரக்கமின்றி கொல்லப்பட்டதை அவர் பார்த்ததாக நீதிமன்றத்தின் முன் எடுத்த சத்தியபிராமணத்தின்படி சாட்சியம் அளித்துள்ளார். இளவயது குழந்தை, அவரது தந்தை, தாய், சகோதரர்கள் ஆகியோர் கொடூரமாக கொல்லப்பட்டதை பார்த்த அவரால் அந்த நிகழ்வை வாழ்நாள் முழுவதும் ,மறக்க வாய்ப்பே இல்லை மற்றும் சம்பவம் நடந்ததற்கும், சாட்சியம் பதிவு செய்ததற்குமிடையே சுமார் 10 ஆண்டுகள் இடைவெளி இருந்தபோதிலும், எந்த நேரத்திலும் அதுபற்றி கேட்டால், நிச்சயமாக அவரது நினைவுகளிலிருந்து உண்மைகளை மீட்டெடுக்க முடியும்.

37. கூர்மையான நினைவாற்றல் கொண்ட குழந்தை சாட்சியை, நீண்ட காலத்திற்கு முன்பு அவர் பார்த்தவற்றை, அவரது நினைவுகளிலிருந்து உண்மைகளை மீட்டெடுக்க முடியாது என்று கூறுவது அவருக்கு அநீதி இழைப்பதாக இந்நீதிமன்றம் உறுதியான கருத்தை கொண்டுள்ளது. ஒரு இளவயது குழந்தை, தனது வாழ்வில் நடந்த அசாதாரண நிகழ்வுகளை எப்போதும் உள்வாங்கிக்கொண்டும்,தனது வாழ்நாளில் அத்தகைய நிகழ்வுகளை ஒருபோதும் மறக்கவும் மாட்டார். எதிர்காலத்தில் குழந்தையிடம் இதைப் பற்றி கேட்கப்படும்பொழுது, சரியாகவும், துல்லியமாகவும் மீண்டும் நினைவுகூர இயலும். எனவே, அ.சா-2-ஆன மதன்லாலின் நம்பத்தகுந்த சாட்சியத்தை நிராகரித்ததற்கான காரணத்தை இந்நீதிமன்றத்தால் உறுதிப்படுத்த முடியாது."

15. ஒவ்வொரு குற்றவியல் விசாரணையும், உண்மையைத் தேடுவதற்கான தேடலாகும். குற்றவியல் விசாரணைக்குத் தலைமை தாங்கும் நீதிபதியின் கடமையானது, எந்த ஒரு நிரபாரதியும் தண்டிக்கப்படக்கூடாது என்பது மட்டுமல்லாமல், குற்றம் செய்த நபரை தப்பவிடாமல் பார்த்துக் கொள்வதும் ஆகும். ஒன்று மற்றொன்றைப்போல் முக்கியமானதுதான். இவை இரண்டும் நீதிபதியால் நிறைவேற்றப்படவேண்டிய பொதுக்கடமைகள் ஆகும். விசாரணை நீதிமன்றம் சாட்சியத்தை தவறாக மதிப்பிட்டு முடிவுக்கு வந்ததில் பிழை புரிந்துள்ளது.

16. விகிதாச்சார கோட்பாட்டின் ஒரு பகுதியாக தண்டனை வழங்குவது என்பது எப்போதும் சிக்கலாக உள்ள வினாவாகும். மேலும், இ.த.ச., பிரிவு 34-ன் உதவியுடன் மேல்முறையீட்டாளர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டவுடன் இந்த பிரச்னை எங்களை கட்டுப்படுத்தவில்லையாயினும், தண்டனை வழங்குவதில் வேறுபாடு காட்டி அவரை தனிமைப்படுத்துவதில் எவ்வித நியாயமுமில்லை எனத் தோன்றுகிறது. எவ்வாறாயினும், அதற்கான சிறப்பு காரணங்கள் எதையும் உயர்நீதிமன்றம் குறிப்பிடவில்லை. எனவே மேல்முறையீட்டாளருக்கு இருபத்தைந்து ஆண்டுகளாக மறுக்கப்பட்டுள்ள தண்டனை குறைப்பு உத்தரவை எங்களால் நிலைநிறுத்த இயலாது. மேலும், தீர்ப்பை அந்த அளவிற்கு மட்டுமே நீக்கறவு செய்து உத்தரவிடுகிறோம்.

17. இதன் விளைவாக, குறிப்பிடப்பட்ட அளவைத் தவிர மேல்முறையீட்டில் எந்த தகுதிப்பாட்டையும் நாங்கள் காணவில்லை.

18. குறிப்பிடப்பட்ட அளவிற்கு மட்டும் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

குறிப்பிடப்பட்ட அளவிற்கு மட்டும் மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல் முறையான நோக்கங்களுக்கும் மற்ற தீர்ப்புரையை நிறைவேற்றறலுக்கும் செயற்படுத்துதலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".